**செ. கு. எண்**:140 **நாள்**:15.10.2011

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 15.10.2011

---

நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லுகின்ற தொழிலாளர்களும், பணியாளர்களும் நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தகைய தொழிலாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் சிறப்பான வாழ்க்கைத் தரம் அமைத்துக் கொடுத்தால் தான், தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்தி அவர்கள் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் செயல்பட முடியும். லாப நோக்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியமும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களும் செயல்பட்டு வருகின்றன.

தற்போது மின்சார வாரியத்திற்கு பெரும் நிதிச்சுமை ஏற்பட்டுள்ள நிலையிலும், தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை வழங்குவது குறித்து 10.10.2011 அன்று தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில், மின் வாரியம் தனது உற்பத்தித் திறனையும், செயல் திறனையும் மேம்படுத்தும் நோக்கத்துடன், அதில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு மன நிறைவான போனஸ் வழங்குவது என எனது அரசு தற்போது முடிவெடுத்துள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன்படி, மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் குடும்பத்தினருடன் பண்டிகை நாட்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட ஒரு கணிசமான தொகையை பெறும் வகையில் போனஸ் மற்றும் கருணைத் தொகையை இந்த ஆண்டு வழங்கிட நான் முடிவு செய்துள்ளேன்.

அந்த அடிப்படையில், 2010-2011 ஆம் நிதி ஆண்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த 71,012 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 சதவீத கருணைத் தொகை, ஆக மொத்தம் 20 சதவீதமும், மேலும் 12,064 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு 1,500 ரூபாய் கருணைத் தொகையும் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 61 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

அதே போன்று, 2010–2011 ஆம் நிதி ஆண்டிற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த 1,30,554 தொழிலாளர்களுக்கு 8.33 சதவீத போனஸ் மற்றும் 11.67 சதவீத கருணைத் தொகை, ஆக மொத்தம் 20 சதவீதமும், மேலும் 14,845 பதிலிப் பணியாளர்களுக்கு 8.33 சதவீத போனஸ் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு 101 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

இந்தியாவிலேயே முதன்மை நிலைக்கு தமிழகத்தை அழைத்துச் செல்லும் எனது நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கும் தொழிலாளர்களையும்,

பணியாளர்களையும் ஊக்குவிக்கும் வகையில் இந்த போனஸ் மற்றும் கருணைத் தொகையை அறிவித்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தற்போது நான் அறிவித்துள்ள இந்த போனஸ் மற்றும் கருணைத் தொகை, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களும், தொழிலாளர்களும் மென்மேலும் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் கடமையாற்ற வகை செய்யும் என்று நம்புகிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**